சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP No. 39 /2018**

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 20-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | புகழகிரி (RW1) | வயது | 54 |
| த.பெ. | | தொழில் | உதவி மேலாளர் |
| முகவரி. | நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி, கோயம்புத்தூர். | | |

எ.ம.சா.1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3-ம் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எ.ம.சா.1 தரப்பில் கீழ்க்கண்ட 1 முதல் 6 ஆவணங்களை குறியீடு செய்யப்படுகிறது.

1) TN42 B 3394 என்ற வாகனத்தின் காப்பீட்டு நகல் - எ.ம.சா.ஆ.1

2) 1-ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் - எ.ம.சா.ஆ.2

3) 1-ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை - எ.ம.சா.ஆ.3

4) 2-ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் - எ.ம.சா.ஆ.4

5) 2-ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை - எ.ம.சா.ஆ.5

6) மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் - எ.ம.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை :**

1) 1-ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை வைத்துதான் சொல்கிறேன் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கவில்லை என்பதால், 1-ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமமே இல்லை என்று முடிவு செய்ய முடியாது என்றால் சரியல்ல. விபத்து வழக்கில் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கவில்லை என்றால் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றுதான் கருத வேண்டும். மேற்படி காப்பீடானது முழு காப்பீடு ஆகும். மனுதாரருக்கு, நாங்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள்தான் என்றால் சரியல்ல. காப்பீடு விதி மீறல் இருப்பதால், 3-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க தேவையில்லை. மனதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று நான் எப்படி சொல்கிறேன்

என்றால், ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது. அதனால் இழப்பீடு தர அவசியமில்லை என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K. Suresh Kumar,
Subordinate Judge,
Avinashi.